**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-050420213709

Volume: 5

Issue: 4

Month: April

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 14.01.2021

Accepted: 15.03.2021

Published: 01.04.2021

Citation:
Zunoomy, MS. "Comparison between the Literary Characteristics of Sangam Period and Pre Islamic Era – An Introductory Study." *Shanlax International Journal of Tamil Research,* vol. 5, no. 4, 2021, pp. 51–60.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i4.3709

*Corresponding Author:
zunoomyzain94@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0

# Comparison between the Literary Characteristics of Sangam Period and Pre Islamic Era – An Introductory Study

**M. S. Zunoomy**
*Research Student, B.A (Hons.) in Linguistics and Translation*
*Temporary Assistant Lecturer, South Eastern University of Sri Lanka*
*Oluvil, Sri Lanka*
https://orcid.org/0000-0003-4285-5288

**Abstract-** Each communities involves in literary field to reflect their origin and uniqueness. Sangam Period on behalf of Tamil language and Pre Islamic Era on behalf of Arabic language are the mostly involvement periods in literary field. Both periods are still talked about in the field of literature that shows theirs antiquity and literary excellence. Literary discussion of these two different language literatures is an essential nowadays. According to this, the significant of this research indicates that each period has been analyzed separately in many views. But comparative analysis is deficiency. Therefore, this research uses comparative descriptive methodology to analysis literary characteristics among them. This paper aims to increase comparative literature discussions among the periods. Understanding the literature through another literature is the important. Therefore, this research will promote comparative studies among Tamil and Arabic literatures in the future.

**Key Words:** Sangam Period, Pre Islamic Era, Literary Characteristics

**References**

1. Abdurrahman, Abib. (1981). *Assifr Wayyamul Arab*. Beirut: Darul Andalu.
2. Abu Bakr, A.M. (1998). *Islamic History*, Part 1.
3. Amin, M.I.M. (T.E.). *Arabian Biology*. Hemmatagama: Alhasanath Publishers.
4. Ibrahim Attarubi. (2018). *Tariqul Azrul Jahili*. www.https://weziwezi.com.
5. Rajendran, M. (1999). *History of Tamil Language*, Chennai, Tamil Development Movement.
6. *Department of Hindu Cultural Affairs*. (2007). Sanga Literature and Society, Colombo: Department of Hindu Religious and Cultural Affairs.
7. Sakthivel, Pon. (2003). *History of Tamil Literature and Textbook Collection*. Lakshmi Press.
8. Shanmugasundaram, Su., Palladam Manikkam, Kamatchi Shanmugam, *History of Tamil*
9. Language. (2005). Kavya, Chennai.
10. Lord Shiva, Gu., Contemporary Tamil Tradition, India, Identity Press, 2011.
11. Majeed, A. (2012). *Native History of the Tamil Language Classical Status Reforms*. Sainthamaruthu, Marudur Publishing Workshop.
12. Saki Laik. (1965). Al-Azr Al-Jahili.Egypt: Dar al-Ma'rib.
13. Hart, George L. (N.D.). *Statement on the Status of Tamil as a Classical Language*, University of California Berkeley Department of South Asian Studies – Tamil. Retrieved from: https:// sangamtamilliterrature.wordpress.com.
14. Sivathamby, K. (1974). *Early South Indian Society and Economy: The Tinai Concept*, Social Scientist, 3(5):2037, JSTOR 3516448.
15. Smart, JR. (1992). *Arabic*. British Kent: Hodder and Stoughton Educational.
16. Stein, B. (1977). *Circulation and the Historical Geography of Tamil Country*, The Journal of Asian Studies, 37(7), DOI:10.2307/2053325, JSTOR 2053325, 1977.

# சங்ககால மற்றும் ஜாஹிலிய்யாக்கால இலக்கியத் தன்மைகளுக்கு இடையிலான ஒப்பீடு – ஓர் அறிமுக ஆய்வு

*எம். எஸ். ஸனூமி*
தற்காலிக உதவி விரிவுரையாளர்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

***ஆய்வுச் சுருக்கம்:***

*ஒவ்வொரு சமூகமும் தன்னுடைய இருப்பையும் தனித்துவத்தையும் சிறப்பையும் பிரதிபலிக்கச்செய்யும் முகமாக இலக்கியத் துறையில் ஈடுபாடு காட்டுவது வரலாறு நெடுகிலும் அறியப்பட்டதொரு கூற்றாகும். இலக்கியத்துறையில் அதிக ஈடுபாடு காட்டிய காலங்களாக தமிழ் மொழி சார்பில் சங்க காலத்தையும், அறபுமொழி சார்பில் இஸ்லாத்திற்கு முற்பட்ட காலத்தையும் பிரஸ்தாபிக்க முடியும். இப்பிரதானமான இரு காலங்களும் இன்று வரை இலக்கியத்துறையில் பேசுபொருளாக காணப்படுவது அவற்றின் தொன்மையையும் அதன் இலக்கியச் சிறப்பினையும் எடுத்தியம்புவதாக அமைகின்றன. இவ்விரு வெவ்வேறுபட்ட மொழியிலக்கியங்களைப் பற்றிக் கலந்துரையாடுவது இலக்கியரீதியாக தேவைப்பாடு உள்ளதொரு விடயமாக காணப்படுகின்றது. இவ்விரு வேறுபட்ட காலகட்டங்களும் தனித்தனியாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டு இருந்தாலும் ஒப்பீட்டுரீதியில் மேற்கொள்ளப்பட்டிருப்பதை அடையாளப்படுத்த முடியாமல் உள்ளது என்றவகையில் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுவதாக அமைகிறது. தமிழ்நாட்டைப் பின்புலமாகக் கொண்ட வரலாற்றுக்கு முந்திய காலமென அழைக்கப்படும் சங்க காலம் தமிழ் இலக்கியத்துறையில் மகத்தான பங்களிப்பை வழங்கியுள்ளது. அறபுமொழியில் இலக்கியத்துறைக்கு பங்களிப்பு செய்த சவுதி அரேபியாவைப் பின்புலமாக கொண்ட இஸ்லாத்திற்கு முற்பட்ட காலமென அறியப்படும் ஜாஹிலிய்யாக்காலம் அறபிலக்கியத் துறைக்கு பெயர்பெற்று விளங்கியது. இவ்வாய்வானது விபரிப்பு முறையில் இவ்விரு இலக்கியங்களிலும் காணப்பட்ட விடயதானங்களை ஒப்பீடு செய்ய முனைகின்றது. இலக்கியத் துறை பரந்துபட்ட பாடப்பரப்பாக காணப்படுவதால் இலக்கியத்தன்மைகளுக்கிடையிலான ஒப்பீடு மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றது. இன்றைய காலகட்டத்தில் இலக்கியக் கற்கைகள் பரவலாக கற்கப்படுகின்றன. இதன்போது வேறுபட்ட மொழிகளில் காணப்படும் இலக்கியங்களை ஒப்பீட்டுரீதியாகக் கற்பது அதிகரிக்கப்பட வேண்டும் என்பதை இவ்வாய்வின் நோக்கமாக கொள்ளமுடியும். வேறுபட்ட மொழிப்பயன்பாடு, கலை கலாச்சார அமைப்பு கொண்ட இலக்கிய ஒப்பீடுகள் இலங்கையில் அரங்கேறுவது அரிது எனும் ஆய்வுப் பிரச்சினையை முன்னிறுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்வு எதிர்காலத்தில் தமிழ், அறபு மொழிகளுக்கிடையிலான இலக்கியதுறைசார் ஒப்பீட்டு ஆய்வுகளுக்கு உந்துசக்தியாக அமையுமெனக் கருதப்படுகிறது.*

***திறவுச் சொற்கள்:*** *சங்க காலம், ஜாஹிலிய்யாக்காலம், இலக்கியத்தன்மை*

## அறிமுகம்

### சங்க காலம்

சங்க காலம் எனக்கொள்ளப்படுகின்ற காலப்பகுதி பண்டைய தென்னிந்திய வரலாறு நிலவிய தமிழக வரலாற்றுக்கு முற்பட்டதாகும். இக்காலம் தமிழ் நாட்டு வரலாற்றில் "முந்து வரலாற்று காலம்" (Early Historic Period) என அழைக்கப்படுகிறது. இக்காலம் கி.மு. 200 தொடக்கம் கி.பி. 250 வரை என வரையறுக்கப்படுகின்றது (இந்து சமய

கலாசார அலுவல்கள் திணைக்களம், 2007). இதில் இடம்பெறும் "சங்கம்" எனும் சொல்லானது கூடல், அவை, மன்றம் போன்ற கருத்துக்களை கொண்டுள்ளது. அதாவது பண்டைத் தமிழகத்தில் தமிழ்ப்புலவர்கள் ஒன்றுகூடி சங்கங்கள் அமைத்து அவற்றின் மூலம் தமிழ் வளர்த்தார்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இக்காலம் தென்னிந்திய வரலாற்றில் மிகச்சிறப்பானதொரு பக்கமாகும். தமிழ் இலக்கியத்தின் பொற்காலமாக வர்ணிக்கப்படும் இக்காலம் இன்றுவரை தமிழ் இலக்கிய கற்கைகளுக்கு மகத்தான பங்களிப்பை வழங்கி வருகின்றது.

## ஜாஹிலிய்யாக்காலம்

ஜாஹிலிய்யாக்ககாலம் எனப்படுவது இஸ்லாம் தோன்றுவதற்கு முற்பட்ட 150 வருடங்களை கொண்ட காலமாக அடையாளப்படுத்தப்படுகின்றது (அபீப் அப்துர்ரஹ்மான், 1984). இதனை அறபியில் "அய்யாமுல் ஜாஹிலிய்யா" என அழைக்கப்படுகின்றது. இச்சொல்லிலுள்ள "ஜாஹிலிய்யா" எனும் அறபுப்பதமானது "ஜாஹிலீ" என்ற அறபுச்சொல்லின் தொகைப்பெயராக பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சொல்லுக்கு அறிவுக்கு முரணாக நடத்தல் எனும் தமிழ்ப்பதம் கொடுக்கப்படுகின்றது. அதாவது இச்சொல்லானது அறிவின்மை, மடமை,முட்டாள்தனம்,சகிப்புத்தன்மையின்மை போன்ற கருத்துக்களை கொண்டுள்ளது (ஸுகி ளயிக், 1965). இந்த அறியாமையானது மனம் அறிவின்றி இருத்தல், ஒரு விடயத்தை உண்மையில் அது இருப்பதற்கு முரணாக நம்புதல், முரணாக ஒன்றைச் செய்தல் போன்ற மூன்று விதமாக வெளிப்படுகின்றது (அல்றாகிப்). இந்த வகையில் இஸ்லாத்திற்கு முற்பட்ட அரேபியரை சுட்டும் "ஜாஹிலிய்யா" எனும் சொல் நம்பிக்கை சார்ந்த, செயல் சார்ந்த அறியாமை நிலவியமையை சுட்டுவதாக அமைகின்றது. மாறாக, அறிவுசார்ந்த அறியாமை அக்கால மக்களிடத்தில் இருக்கவில்லை என்பதை அவர்களின் இலக்கியத்துறைசார் ஆர்வத்தினையும், அறிவாற்றலையும், நாகரீகச் சிறப்பையும் வைத்து அடையாளப்படுத்திக் கொள்ளலாம். அன்றைய தென்பிரதேசத்தில் வாழ்ந்த அரேபியர்கள் ஏனைய பிரதேசத்தில் வாழ்ந்த அரேபியர்களைவிட சற்று உயர் அந்தஸ்தில் காணப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். பொதுவாக நோக்குமிடத்து, அறேபியர்கள் மூடநம்பிக்கைகள், கோத்திர உணர்வு, மடமை போன்றவற்றில் கடும்போக்குடன் காணப்பட்டனர். அவர்களிடம் அறிவு காணப்பட்டபோதிலும் அதில் தெளிவு இருக்கவில்லை. அதேபோல் அவர்களிடம் சில நல்ல பண்புகள் (நீர் புகட்டுதல், உபகாரம் செய்தல்) காணப்பட்ட போதிலும் அதில் ஆன்மீக விருத்தி இருக்கவில்லை. இந்தவகையில் "ஜாஹிலிய்யா" எனும் சொல் இஸ்லாத்திற்கு முந்திய அறேபியரின் செயல், நம்பிக்கை, கொள்கை சார்ந்த அறியாமையைக் குறிப்பிட பயன்படுத்தப்படுகின்றது எனலாம்.

## இலக்கிய மீளாய்வு

சிவசோதி கேசவன் (2017), இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழக ஏழாவது ஆய்வு மாநாட்டிற்கு சமர்பித்த ஆய்வுக் கட்டுரை "சங்க இலக்கியங்களில் குற்றமும் தண்டனையும்".

இவ்வாய்வுக் கட்டுரை சங்க இலக்கியங்களில் காணப்பட்ட குற்றங்களும், அதற்கான தண்டனைகளையும் இலக்கியங்களில் இருந்து மேற்கோள் காட்டி விபரிக்கப்பட்டிருந்தது. சங்க இலக்கியங்களினூடாகப் புலப்படும் சமுதாயம், மேலெழுந்தவாரியாகச் சுட்டப்படுவதைப் போன்றதொரு இயற்கை நெறியுடன் ஒன்றித்து வாழ்ந்த பொற்காலச் சமுதாயம் அல்ல. அதன் கண்ணும் பல்வேறுபட்ட வர்க்க வேறுபாடுகள், முரண்பாடுகள், அகநிலைச்

சிக்கல்கள், பாரபட்சங்கள் நிலவியதனைச் சங்க இலக்கியங்களே சுட்டி நிற்கின்றன. சங்க இலக்கியங்களில் பல்வேறுபட்ட உரிமை மீறல்களும், குற்றங்களும், அதற்கான தண்டனைகளும் வழங்கப்பட்டதனை அவதானிக்க முடிகிறது. அக்காலத்தில் குற்றமாகக் கருதப்பட்டவற்றை மக்கள் விரும்பாமையையும், அதனை இகழ்வதனையும் அவதானிக்க முடிவதுடன், தமக்கெதிராக அநீதி நடந்தேறியுள்ளதெனக் குரலெழுப்புவதனையும் அவதானிக்க முடிகிறது. இந்நிலையில், சங்க இலக்கியங்களில் குற்றங்களும், தண்டனைகளும் எவ்வாறு பதிவு செய்யப்பட்டிருக்கின்றதென்பதை ஆராயும் வகையில் இவ்வாய்வு அமைகிறது.

அஸ்றப். யுசுப்.எம். (2015), இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழக கலை, கலாசார பீட ஆய்வரங்கிற்கு “சங்க இலக்கியங்களில் புலவர்களின் வெளிப்பாட்டுத்திறன்: நற்றிணையை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு” எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையொன்று சமர்பிக்கப்பட்டது.

இந்த ஆய்வானது சங்க இலக்கியங்களில் புலவர்களின் வெளிப்பாட்டுத்திறனை நற்றிணைப் பாடல்களின் ஊடாக தேடும் முயற்சியாக அமைகின்றது. சங்க அகப்பாடல்கள் அகமாந்தர்களின் உணர்வுகளையும் அவை தோன்றும் பின்புலங்களையும் முதன்மைப்படுத்தி நிற்கின்றன. சங்கப்புலவர்கள் அகமாந்நர்களின் உணர்வுகளை பல்வேறு உத்திகளைக் கையாண்டு வெளிப்படுத்தியிருக்கின்றனர். சிறப்பாகக் கூற்றினைக் கூறும் முறையால் கேட்போருக்கு தம் உணர்வுகளைத் தெரியப்படுத்துதல் என்பது முதன்மை பெறுகின்றது. இதில் உவமை, உள்ளுறை, இறைச்சிப்பொருள், வெளிப்படையாகக்கூறி உணர்த்தல் போன்ற உத்திகள் கையாளப்படுகின்றன. சங்கப் புலவர்கள் கையாண்ட வெளிப்பாட்டுத்திறன் உத்திகள் தற்கால நவீன கவிதைகளில் படிமம், குறியீடு, உருவகம் போன்ற உத்திகளாகப் பேசப்படுகின்றன. படிமம், குறியீடு போன்ற சொற்கள் சங்க காலத்தில் பயன்பாட்டில் இருக்கவில்லை. இச்சொற்கள் குறிக்கும் செயற்பாடுகள் சங்கப் புலவர்களால் உவமை, உள்ளுறை, இறைச்சிப்பொருள் போன்ற வெளிப்பாட்டுத்திறன் உத்திகளாகக் கையாளப்பட்டிருக்கின்றன. அந்த வகையிலே அக இலக்கியங்களுள் ஒன்றான நற்றிணையை மூலமாகக்கொண்டு இந்தத் தேடல் அமைகின்றது.

றொஷான், றோ.பெ. (2016), இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழக கலை, கலாசார பீட ஆய்வரங்கிற்கு “சங்க இலக்கியத்தில் சூழலியற் சிந்தனை” எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையொன்று சமர்பிக்கப்பட்டது.

இவ்வாய்வில் சூழலியல் என்பது இன்று வெகுவாக வளர்ந்து வருகின்ற துறையாகும். தமிழிலே அறிவியற்றமிழ், கணினித் தமிழ் என்று வளர்ந்து வருகின்ற நிலையிலும் சூழலியல் தொடர்பான சிந்தனைத் துறை இன்னமும் முகிழ்விடத் தொடங்கவில்லை என்றே கூறலாம். சூழலியல் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் தாவரம், விலங்குகள் பற்றிய அறிவியற் துறையாகும். இத்துறையானது சூழலுக்கும் உயிரினங்களுக்கும் இடையிலான உறவை ஆராயும் ஒரு துறையாக வளர்ச்சி கண்டுள்ளது. சங்க இலக்கியங்கள்பொதுவாகவே முதல், கரு, உரிப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டுபாடப்பட்டுள்ளன. ஒவ்வொரு செய்யுளும் ஏதேனும் ஒரு நிலத்தை அல்லது அது சார்ந்தகருப்பொருட்களை பின்புலமாகக் கொண்டே உரிப்பொருளை விளக்குகின்றன. சங்கஅகப்பாடல்களில் இக்கருத்தின் ஆதிக்கத்தைத் தெளிவாகக் கண்டுணரலாம். பழந்தமிழரிடத்தே காணப்பட்ட சூழலியல் தொடர்பான சிந்தனையை ஆய்ந்தறிவதே இவ்ஆய்வின் பிரதான நோக்கமாகும். சூழலியல் என்பது இன்று

ஓர் அறிவு சார்ந்த துறையாகவளர்ந்துள்ள போதும் பழந்தமிழரிடத்தே அவ்வாறு அல்லாமல் ஒரு அவதான நிலையில்பயன்பட்டுள்ளமை புலனாகின்றது. இன்று சூழலியல் தொடர்பான சிந்தனையானதுமனிதனின் அவசியத் தேவைகளிலும் செல்வாக்குச் செலுத்து கின்றது. இதன்விளைவாகவே நிலம், நீர், வளி, ஒலி மற்றும் உணவு மாசடைதல் என இச்சிந்தனைத்துறை அகலக்கால் பதித்துள்ளது. இவ் ஆய்வின் மூலங்களில் குறிப்பாக முதல்நிலைத் தரவுகளாகச் சங்க இலக்கியங்களில் ஒன்றான குறுந்தொகை எடுத்தாளப்படவுள்ளது. இந்த ஆய்வினூடாகப் பழந்தமிழரின் சூழலியல்சார் சிந்தனைகள் தேடித் தொகுக்கப்படுவதோடு, குறிப்பாக அவற்றிலே நிலம், நீர், வளி, ஒலி மற்றும் உணவு மாசடைதல் தொடர்பாக ஆராய்ந்து அச்சிந்தனைகளைப் பட்டியற்படுத்துவதாக அமையும்.

ஆய்வாளரின் தேடலுக்குட்பட்ட வரை, சங்க இலக்கியம் மற்றும் ஜாஹிலிய்யாக் கால இலக்கியம் தொடர்பான ஒப்பீட்டாய்வுகள் கண்டு கொள்ளப்படவில்லை. இத்தோரணையில் இவ்வாய்வானது குறித்த இரு காலப் பகுதிகளின் இலக்கியத் தன்மைகளை பற்றி ஆராய்கின்ற அறிமுக ஆய்வாக கருதப்படுகின்றது.

### கலந்துரையாடல்

### சங்க கால இலக்கியத் தன்மை

சங்க கால இலக்கியங்கள் கிறிஸ்துவுக்கு முந்திய காலத்தில் எழுதப்பட்ட செவ்வியல் இலக்கியங்கள் ஆகும். இக்காலத்தில் படைக்கப்பட்ட இலக்கியங்கள் அகம், புறம் என இருவகையில் உள்வாங்கப்படுகின்றது. இதில் சுமார் 473 புலவர்களால் எழுதப்பட்ட 2381 கவிதைகள் உள்ளன. அவை அக்காலத் தமிழர்களின் தினசரி வாழ்க்கையை படம்பிடித்துக்காட்டுகின்றன. அதேபோன்று அவர்களின் வீரம், போர், காதல், வியாபாரம் போன்றவற்றையும் விபரிக்கின்றன. இக்கால இலக்கியங்களான அகத்திணையானது காதல், ஒழுக்கம் போன்றவற்றையும், புறத்திணையானது போர், பிற ஒழுங்குகள் பற்றி பேசுபவையாகவும் அமையப்பெற்றுள்ளன. 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த சி.வை. தாமோதரம் பிள்ளை, உ.வே. சாமிநாதையர் ஆகியோரின் முயற்சியில் அச்சுருவாக்கம் செய்யப்பட்ட நூற்களின் பட்டியலை (அட்டவணை 1) பிரஸ்தாபிக்கின்றது.

| புறத்திணை நூற்கள் | அகத்திணை நூற்கள் |
|---|---|
| புறநானூறு | அகநானூறு |
| பதிற்றுப்பத்து | நற்றிணை நானூறு |
| பரிபாடல் | குறுந்தொகை நானூறு |
| திருமுருகாற்றுப்படை | ஐங்குறு நூறு |
| பொருநராற்றுப்படை | கலித்தொகை |
| சிறுபாணாற்றுப்படை | குறிஞ்சிப்பாட்டு |
| பெரும்பாணாற்றுப்படை | முல்லைப்பாட்டு |
| மதுரைக்காஞ்சி | பட்டினப்பாலை |
| நெடுநல்வாடை | |
| மலைபடுகடாம் | |

(அட்டவணை 1)

சங்க காலத்தை சேர்ந்த புலவர்களை "சங்க காலப் புலவர்கள்" என்பர். இவர்கள் மன்னர்களின் போர்த் திறமையையும், போரில் வெற்றி பெற்றதையும் பாடியிருக்கின்றனர். இன்னும் சிலர் மன்னர்கள் பகையின்றி ஒற்றுமையுடன் வாழ பாடுபட்டிருக்கிறார்கள். இக்காலத்தில் காணப்பட்ட புலவர்களுள் 32 பெண் புலவர்களும் காணப்பட்டனர். இவர்கள் பாடிய பாடல்கள் அகநூனூறு, புறநானூறு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, பொருநல் ஆற்றுப்படை, நற்றிணை போன்ற பிரிவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இக்காலத்தில் கவிஞர்களின் அந்தஸ்து போற்றிப்புகழும் அளவிற்கு காணப்பட்டன. இக்கால புலவர்களாக அகத்தியர், கபிலர், பரணர், இறையனார், இளநாகனார்,

பெருவழுதி, காரிகிழார், ஐயூர் முடவனார் போன்றோரை ஈன்று கூறலாம்.

இக்காலத்தில் அகம், புறம் எனும் பொருள் மரபு பெருவழக்காய் இருந்தன. அகத்திணை என்பது காதல், ஒழுக்கம் பற்றியும், புறத்திணை போர் முதலிய பிற ஒழுக்கங்கள் பற்றியும் இயற்றப்பட்டன. இக்காலத்தில் ஐவகை நிலப்பாகுபாட்டிற்கு ஏற்ப ஒழுக்கங்கள் அமைந்திருந்தன. குறிஞ்சிப் புணர்தல், பாலைக்கு பிரிதலும், முல்லைக்கு இருத்தலும், மருதத்திற்கு ஊடலும், நெய்தலுக்கு இரங்கலும் சிறப்பான ஒழுக்கங்கள் ஆயின. காதலனுக்கும், காதலிக்கும் இடையே உள்ள ஒழுக்கத்தை புலவன் கூறும்போது பெயர் சுட்டாது கூறுவதுண்டு. சுட்டாது கூறும் பாக்கள் அகத்திணைக்குரியவையாகும். முதற்பொருள் என்பது ஒவ்வொரு திணைக்குமுரிய நிலமும், பொழுதும் ஆகும். குறிஞ்சிக்கு மலையும், முல்லைக்கு காடும், மருதத்திற்கு வயலும், நெய்தலுக்கு கடலும் நிலங்களாகும். பொழுது என்பது பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படும். பெரும்பொழுதுகளாக கார், கூதிர், இளவேனில், முதுவேனில், முன்பனி, பின்பனி போன்ற வருடத்தின் கூறுகள் பெரும்பொழுதுகளாகும். மாலை, இடையாமம், விடியல், காலை, நண்பகல், ஏற்பாடு போன்ற நாளொன்றின் கூறுகள் சிறுபொழுதுகளாக அமைகின்றன.

கருப்பொருள் எனப்படுவது ஐந்திணை களுள் ஒவ்வொன்றுக்கும் உரிய தெய்வம், தலைமக்கள், பொதுமக்கள், விலங்கு, புல், மரம், பு,ஊர், நீர், உணவு, பறை, யாழ், தொழில் ஆகிய பொருட்களைக் குறிக்கும். அகத்திணை செய்யுளுக்கு உயிர் நிலையான பொருள் உரிப்பொருளேயாகும்.

உரிப்பொருள் என்பது ஐந்திணைக்குரிய காதல், ஒழுக்கங்களைக் குறிக்கும்.

கைக்கிளை என்பது ஒரு தலைக்காமம். அது தலைவன், தலைவி ஆகிய இருவருள் ஒருவரிடமே தோன்ற விளங்கும் காதல். அதனை மூன்றாக வகுத்துக்கூறுவர். முதலாவது பருவம் எய்தாத பேதை ஒருத்தியைக் கண்ட ஆடவன் ஒருவன் அவள் மேல் காதல் கொண்டு அவளைப்பற்றி பலவாறெல்லாம் சொல்லி இன்புறுதல். இரண்டாவது பருவம் ஒத்த அன்பினராய ஒருவனும், ஒருத்தியும் ஊர்வசத்தால் ஒருவரை ஒருவர் எதிர்படக்கூடும் கூட்டத்துக்கு முன் தலைவனிடம் பெரும்பாலும் நிகழும் காட்சி, ஐயம், தெளிதல், தேறல் என்னும் நான்கு செய்திகளுமாகும். மூன்றாவது பருவம் கொல்வேறு தழுவுதல் முதலியவை காரணமாக நிகழும் மணமுறையாகும்.

பெருந்திணை என்பது பொருந்தாக்காமம் ஆகும். ஒருவன் ஒருத்தியிடம் மிக்க காமத்தனாகி அவளை அடையப்பெறாது மடலேறுதல், வரைபாய்தல் முதலியவற்றால் தன்னை மாய்த்துக்கொள்ளுதல் ஆகியவற்றை பொருளாக கொண்டு விளங்கும் செய்யுட்கள் பெருந்திணையின் பாற்படுவன.

**ஜாஹிலிய்யாக்கால இலக்கியத்தன்மை**

அறேபியர் தமது கலாசார வாழ்வில் கவிதையின்பால் பெருவேட்கையும், உளச்சார்பும் கொண்டிருந்தனர். கவிதை என்பது அவர்களது சமூக, கலாசார, அறிவு நிலைமைகளை பிரதிபலிக்கும் வண்ணம் இருந்தது. இக்கால இலக்கிய அமைப்பை கவிதை இலக்கியம் மற்றும் உரைநடை இலக்கியம் என இருவகைப்படுகின்றது. கவிதை இலக்கியமானது இலக்கிய மரபு, சொல்வளம், மொழிநடை, பொருளமைதி போன்றவற்றை கொண்ட தொரு இலக்கியமாகும். அக்காலத்தில் கோத்திரப் பெருமையை பறைசாட்டும் ஊடகமாக கவிதையே காணப்பட்டது. கோத்திரப் புகழை, பரம்பரையின் பெருமையை,

குலத்தூய்மையை பிரதிபலிக்கும் ஒன்றாகக் கவிதை இலக்கியத்தை நோக்கினர். உரைநடை இலக்கியத்தை பொறுத்தமட்டில் பிரசாரங்கள், பழமொழிகள், நற்கருத்துக்கள் மூலம் அரங்கேறின. இவைகளும் அக்கால மக்களின் இலக்கியத் தேவையை புரணப்படுத்த வழியமைத்தது. இலக்கியமென்பது ஒரு சமூகத்தின் இருப்பை வெளிக்கொணரக் கூடியது என்றவகையில் ஜாஹிலிய்யாக்கால இலக்கியமும் அக்கால மக்களை பிரதிபலிக்காமல் விடவில்லை.

இக்காலத்தில் வாழ்ந்த கவிஞர்களுக்கு சமூகத்தில் மிக உன்னதமானதொரு இடமிருந்தது. அவர்கள் புகழுக்கும் சிறப்புக்கும் உரித்துடையவர்களாக காணப்பட்டனர். கோத்திரமொன்றில் கவிஞன் ஒருவன் தோன்றினால் அதற்காக விழா நடத்திக் கொண்டாடுவர். மேலும் கோத் திரதலைமைக்கு அவரை நியமிப்பர். தம் கோத்திரத்தின் புகழை நிலைநாட்டி எதிர்கோத்திரங்களை இகழ்ந்து பாடுவதே கவிஞர்களின் பணியாக இருந்தது. ஒவ்வொரு கோத்திரத்தினதும் வீர நாயகர்களின் கீர்த்தியை பாடவும், அதனோடு எதிரிகளுக்கு எதிராக பாடல் இயற்றவும் கவிஞர்கள் நியமிக்கப்பட்டு இருந்தனர். இதனால் ஒரு வர்க்கத்தை விட மற்றையது மேலாதிக்கம் செலுத்த போட்டி போட்டுக்கொண்டது. கோத்திரத்தின் பெயரைக் காப்பவனாகவும், களங்கம் ஏற்படும்போது அதை இல்லாமல் செய்பவனாகவும் கவிஞன் காணப்பட்டான். குறிப்பாக கோத்திர பெருமையை சமூகத்தில் நிலைநிறுத்தும் தூதனாகவும், அனைத்து மக்களினது கௌரவத்தை பாதுகாக்கும் அரணாகவும் விளங்கினான். இக்காலத்தில் வாழ்ந்த கவிஞர்களாக முஹல்ஹில் பின் ரபீஆ, அன்தரா அல்அபஸி, கைஸ் பின் ஆஸிம், சுஹைர் பின் அபீ ஸல்மா, இம்ரஉல் கைஸ் போன்றோரை குறிப்பிடலாம் (அபீப் அப்துர்ரஹ்மான், 1984).

ஜாஹிலிய்யாக் கால கவிதைகள் முற்றுப்பெறாதவை, முற்றுப்பெற்றவை என வகைப்படுத்தப்படுகின்றது. இதில் முற்றுப்பெறாத கவிதையை “ஸஜஃ, ரஜ்ஷ்” என இருவகைப்படுத்துவர். “ஸஜஃ” என்பது செய்யுள் அமைப்பும், ஒழுங்கான சந்தமும் பெறாத மூன்று, நான்கு வார்த்தைகளை உள்ளடக்கிய சிறுசிறு வசனங்களை கொண்ட அமைப்பாகும். இதனை கவிதை அமைப்பின் முதற்கட்டமாக வரையறுக்க முடியும். அதேவேளை “ரஜ்ஷ்” என்பது “ஸஜஃ” கவிதையின்

திருத்திய வடிவமாகும். அதாவது எதுகை, மோனை கொண்ட அமைப்பாகும். அடுத்து, முற்றுப்பெற்ற கவிதைகள் “முஅல்லகாத்” எனும் அறபுக்கவிதை தொகுப்புகளில் பாதுகாக்கப்பட்டுள்ளது. இக்கவிதைகள் பெரும்பாலும் அறேபியரின் போர்கள் தொடர்பானவையாகவே அமைந்துள்ளன. குறிப்பாக இக்கவிதைகள் அறேபியரின் சமய, சமூக, கலாசார நிலைமைகளை பிரதிபலிக்கும் வகையிலும் விளங்குகின்றன. இன்றளவில் அறேபிய சமூக கவிதைகள் தொகுக்கப்பட்டு “தீவான்” (களஞ்சியம்) எனும் பெயரில் அமையப்பெற்றுள்ளன.

நிலப்பரப்புரீதியாக அறேபியரின் வாழ்வியலும், சூழல் அமைப்பும் வேறுபட்டுக் காணப்பட்டது போன்று இஸ்லாத்திற்கு முந்திய அறபுக்கவிதையின் பண்புகளும் கருப்பொருட்களும் பலவாறான அமைப்புக்களில் காணப்பட்டன. இக்கால கவிதைகளுள் அதிகமானவை பெருமை, வீரம், வர்ணனை, வசை, இரங்கல், புகழ் போன்ற கருப்பொருட்களை மையமாக கொண்டிருந்தன. இக்கால கவிஞர்களின் கவிதைகள் பெரும்பாலும் தன்னுணர்ச்சிப் பாடல்களாகவே இருந்தன. தன்னுணர்ச்சிப்பாடல் அமைப்பு இரசனையுடன் பாடுவதற்கும், பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் பொருத்தமானதாகவும்,

தங்களது மனக்கிளர்ச்சிகள், சொந்த எண்ணங்கள், கஷ்டங்கள், வேதனைகள் ஆகியவற்றை போக்கிக் கொள்ளதிறனார்ந்த கருவியாகவும் இருந்தமையினாலேயே இக்கால கவிஞர்கள் இந்த அமைப்பை தேர்ந்தெடுத்திருந்தனர். அறேபியர்களின் வாழ்க்கையானது கருத்து முரண்பாடு, கோத்திர நலன், போர்க்கள செயற்பாடுகள் போன்றவற்றுடன் நெருக்கமான தொடர்புடையதாக இருந்ததால் தம் கோத்திரத்தின் நலனை வளர்க்கவும், நலனைப்பேணவும் கவிஞர்கள் தங்கள் கோத்திரங்களின் வீரம், கொடை, கற்பு, உண்மை, போர்த்திறமைகள் போன்றவற்றை கவிதைகளில் எடுத்தியம்புவர். குறிப்பாக, இக்கால கட்டத்தில் காதல் கவிதைகள் முக்கிய இடத்தை வகித்தன. ஏனெனில் பாலைவன நாடோடி வாழ்வில் கோத் திரங்கள் புதிய புல்வெளிக்காகப் பிரிந்து செல்லும்போது காதலர்களும் பிரிந்து தத்தம் கோத்திரத்துடன் செல்வதால் பிரிவுத்துயரை அனுபவிக்கும் போது தங்கள் உணர்வுகளை கவிதைகளாக வடிப்பர். பொதுவாக, இக்கால கவிதைகளை மேலோட்டமாக வாசிக்கும் போது ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதவாறு தோன்றினாலும் ஆழமான வாசிக்கும் போது கருத்துச்செறிவை அவதானிக்க முடியும். மேலும் இக்கால கவிதைகள் பொருட்செறிவு மிக்கவையாகவும், மனதை இதப்படுத்துவதாகவும், மனித உணர்வுகளை செம்மைப்படுத்துவதாகவும் அமைந்திருந்தன.

உதாரணமாக இக்கால காதல் கவிதையொன்றின் கட்டமைப்பு பின்வருமாறு அமைகின்றது. கவிதையின் முதற்பகுதியில் கவிஞன் தன் தோழனுடன் பிரயாணம் செய்வதாக கற்பனை பண்ணிக்கொண்டு பிரயாண வழியில் நண்பனை சற்று தாமதிக்கக் கூறி தன்னைச் சுற்றியுள்ள பாலைவனச் சூழலை, தன் ஒட்டகம், பிரயாணம் செய்த பாதை போன்றவற்றுடன்தான் இளமைக்காலத்தில் தன் காதலியுடன் கழித்த நினைவுகளையும், பிரிவுத்துயரையும், அவளின் அழகையும் நினைத்து வருந்துவது போல் பாடுவான். கவிதையின் நடுப்பகுதியில் தன் கோத் திர புகழ், வீரம்,கொடை, விருந்தோம்பல் போன்றவற்றை பாடுவான். குவிதையின் இறுதிப்பகுதியில ' தன் அனுபவ ரீதியான அறக்கருத்துக்களை பாடுவான்.

**சங்க கால, ஜாஹிலிய்யாக் கால இலக்கியத்தன்மைகளுக்கு இடையிலான ஒப்பீடு**

| சங்க கால இலக்கியத் தன்மைகள் | ஜாஹிலிய்யாக் கால இலக்கியத்தன்மைகள் |
|---|---|
| சங்க கால மக்களின் அகவாழ்வு, புறவாழ்வு ஆகியவற்றைப் பிரதிபலித்தன. | இக்கால மக்களின் யதார்த்த பூர்வ வாழ்வியலை படம்பிடித்துக்காட்டின. |
| மக்கள் தங்கள் நாளாந்த வாழ்வை எவ்வாறு அமைத்துக்கொண்டனர் என்பதை விளக்கின. | இக்கால மக்கள் தங்கள் நாளாந்த வாழ்வை எவ்வாறு அமைத்துக்கொண்டனர் என்பதை கவிதைகள் விவரித்தன. |
| இக்கால கவிதைகளில் பிறமொழிச்சொற்களின் தாக்கம் மிக மிக அரிது. | கவிஞர்கள் பிறமொழிச் சொற்களை பாவிப்பதில் ஈடுபாடு காட்டவில்லை. ஏனெனில் பொருட் செறிவு மிக்க சொற்கள் அம்மொழியிலேயே காணப்பட்டது. |
| கவிதைகளிலுள்ள சொற்கள், சொற் கட்டமைப்பு இறுக்கமானதாக காணப்பட்ட அதேவேளை தூய தமிழ்ச்சொற்கள் பாவிக்கப்பட்டுள்ளன. | கவிதையை அவதானிக்கும் போது சொற்பயன்பாடும், சொற்பிரயோகமும் பொதுப்பயன்பாட்டை விட வித்தியாசமான போக்கில் அமைந்திருந்தன. குறிப்பாக பொருட் செறிவு மிக்க சொற்கள் பயன்படுத்தப்பட்டன. |
| கவிதை வரிகள் நெடிய பாக்களை கொண்டதாக ஆரம்பத்திலிருந்து காணப்பட்டன. எனினும் சில தொகுப்புக்கள் குறுகிய செய்யுட்களை கொண்டும் காணப்பட்டன. | கவிதையமைப்பானது மூன்று, நான்கு வரிகளைக் கொண்டவையாகவும், பின்னர் அதிக வரிகளை கொண்டதாகவும் காணப்பட்டன. |

| | |
|---|---|
| மக்களின் நாளாந்த நடைமுறைகளிலுள்ள வணக்கவழிபாடு, போர், வீரம், காதல், பிற ஒழுக்கங்கள், ஆடையணிதல் பற்றி பேசின. | மக்களின் இயல்பு வாழ்க்கையை கோத் திரப் பெருமை, வீரம், காதல்,புகழ், வசை, வர்ணனை மூலம் வெளிப்படுத்தின. |
| இக்கால கவிஞர்கள் அகம், புறம் எனும் மரபு தாங்கி அம்மக்களின் உலக வாழ்வியலை படம்பிடித்து க்காட்டினர். | இக்கால கவிஞர்கள் தங்கள் சமய, சமூக, கலாசார நிலைமைகளை பிரதிபலிக்கும் கருவியாக கவிதை பாடுவதை ஆக்கிக்கொண்டனர். இதன்போது தங்கள் எண்ணங்கள், கருத்து க்களை வெளியிட்டது போன்று இக்கட்டான வேளைகளில் தாம் சார்ந்த வர்க்கத்தின் அபிப்பிராயங்களையும் கவிதை மூலம் வெளிப்படுத்தினர். |

(அட்டவணை 2)

## முடிவுரை

இலக்கியத்துறை என்பது ஒரு சமூகத்தின் சிறப்பையும், இயல்பையும் வெளிக்கொணரும் ஓர் ஊடகமாகும். இந்தவகையில் வரலாற்றுக்கு முந்திய காலமாக அடையாளப்படுத்தப்படும் சங்க காலம் தமிழ் நாட்டில் தமிழ்மொழியினூடாக கவிதைக்கு பெயர்பெற்ற காலமாகும். இக்காலக் கவிஞர்கள் மக்களின் அகம், புறம் சித்தரிப்பதில் வல்லவர்களாக இருந்தனர். பிற்பட்ட கால அரசியல் மாற்றங்களினால் சமயம் சார்ந்த போதனைக் கவிதைகளை புனைவதில் புலமையாகக் கவிஞர்கள் செயற்பட்டனர். இக்காலக் கவிதைகள் எதுகை, மோனை, உருவக, உவமை அணிகளை உட்பொதிந்து காணப்பட்டன.

இதனைத்தொடர்ந்து அறபுமொழியில் இலக்கியத்துக்கு பங்களிப்பு செய்த காலமாக இஸ்லாத்திற்கு முற்பட்ட காலத்தை (ஜாஹிலிய்யாக் காலம்) கூறலாம். இக்கால மக்கள் தங்கள் தனித்துவத்தையும் சிறப்பையும் வெளிப்படுத்தும் வகையில் கவிதை இலக்கியத்தில் அதிக ஈடுபாடு காட்டினர். அவர்கள் தங்கள் உணர்வுகளையும், நாளாந்த வாழ்வியலையும் வெளிப்படுத்தும் கருவியாக இதனை கைக்கொண்டனர். இக்கால கவிஞர்கள் மிக உயர் அந்தஸ்தில் வைத்து பார்க்கப்பட்டதன் காரணத் தினால் கவிதை இலக்கியம் மென்மேலும் வளர்ச்சியடைந்தது. இவர்கள் இன்றும் மிகச்சிறந்த புலமை உடையவர்களாக வர்ணிக்கப்படுகின்றனர்.

இவ்விரு கால கட்ட கவிதைகளும் சமூக இயல்பை, வாழ்வியலை எடுத் தியம்புவதாகவே காணப்படுகிறது. இவ்விரு காலக் கவிதைகளும் எதுகை, மோனை, உவமை, உருவக அம்சங்களில் பேணுதலாக அமைந்திருந்தன. இந்தவகையில் சங்க காலக் கவிதைகள் தமிழ்மொழி பாணியிலும், ஜாஹிலிய்யாக்க கால கவிதைகள் அறபுமொழியின் பாணியிலும் நிரப்பமான அளவு இலக்கியத்துறைக்கு பங்காற்றியுள்ளன.

## உசாத்துணைகள்

1. அப்துர்ரஹ்மான், அபீப். (1984). அஸ்ஸிஃர் வஅய்யாமுல் அரப்.பைரூத்: தாருல் அன்தலூஸ்.
2. அபுபக்ர், ஏ.எம். (1998). இஸ்லாமிய வரலாறு, பாகம் 1.
3. அமீன், எம்.ஐ.எம். (தி.இ.). அறேபியர் வாழ்வியல். ஹெம்மாதகம: அல்ஹஸனாத் பப்ளிஷர்ஸ்.
4. இப்ராஹீம் அத்தரூபி. (2018).தாரிகுல் அஸ்ருல் ஜாஹிலி. www.https://weziwezi.com.
5. இராசேந்திரன், எம். (1999). தமிழ் மொழி வரலாறு. சென்னை: தமிழ் வளர்ச்சி இயக்கம்.
6. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம். (2007). சங்க இலக்கியமும்
7. சமூகமும், கொழும்பு: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
8. சக்திவேல், பொன். (2003). தமிழ் இலக்கிய வரலாறும் பாடநூல் தொகுப்பும். லக்சுமி அச்சகம்.
9. சண்முகசுந்தரம், சு., பல்லடம் மாணிக்கம்,

காமாட்சி சண்முகம். (2005). தமிழ் மொழி வரலாறு. சென்னை: காவ்யா.

10. பரமசிவம், கு. (2011). இக்காலத் தமிழ் மரபு. இந்தியா: அடையாளம் பிரஸ்.

11. மஜீத், ஏ. (2012). தமிழ் மொழியின் புர்வீக வரலாறு செம்மொழி அந்தஸ்து சீர்திருத்தங்கள்.சாய்ந்தமருது: மருதூர் வெளியீட்டு பணிமனை.

12. ஸுகி ஸயிக். (1965). அல் அஸ்ர் அல்ஜாஹிலி.எகிப்து: தாருல் மஆரிப்

13. ஹார்ட், ஜார்ஜ் எல். (என்.டி.) ஒரு பாரம்பரிய மொழியாக தமிழின் நிலை குறித்த அறிக்கை, கலிபோர்னியா பெர்க்லி பல்கலைக்கழகம் தெற்காசிய ஆய்வுகள் துறை - தமிழ். பெறப்பட்டது: https: // sangamtamilliterrature.wordpress.com

14. சிவதம்பி, கே. (1974). ஆரம்பகால தென்னிந்திய சமூகம் மற்றும் பொருளாதாரம்: தி திணை கருத்து. சமூக விஞ்ஞானி. 3 (5): 20- 37. JSTOR 3516448.

15. ஸ்மார்ட், ஜே.ஆர். (1992). அரபு. பிரிட்டிஷ் கென்ட்: ஹோடர் மற்றும் ஸ்டாப்டன் கல்வி.

16. ஸ்டெய்ன், பி. (1977). சுழற்சி மற்றும் தமிழ் நாட்டின் வரலாற்று புவியியல். ஆசிய ஆய்வுகள் இதழ். DOI:10.2307/2053325, JSTOR 2053325